செ.வெ.எண்: 11/ஏப்ரல் நாள்: 09.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பதற்றமான வாக்குச்சாவடி மையங்களை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் இன்று (09.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து அதன்பின்பு, திருவாடனை பேருந்து நிலைய வளாகத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி 73 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அதனடிப்படையில் இன்று திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தேவிபட்டினம், ஆர்.எஸ்.மங்கலம், சீ.கே.மங்கலம், மேல் பனையூர் ஆகிய கிராமங்களில் உள்ள பதற்றமான வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட வசதிகளை ஆய்வு செய்தார். மேலும் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களித்திட ஏதுவாக, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, திருவாடனை பேருந்து நிலைய வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை கையொப்பமிட்டு துவக்கி வைத்தார். பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு ஆர்வமுடன் கையொப்பமிட்டனர். அதன்பின்பு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிக்கும் முறை குறித்து செயல்முறை விளக்கம் மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆனந்தூர் விளக்கு பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் பறக்கும் படை குழுவினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, திருவாடனை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்ட வழங்கல் அலுவலர்) திரு.ராஜசேகரன், ஆர்.எஸ்.மங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.இளவரசி, உதவி தேர்தல் அலுவலர்கள் திரு.சுகுமார், திரு.மாரி, திரு.காளிமுத்து, உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**